தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**11 வயதுப்பிரிவு**
(01.01.2012 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## கேணல் கிட்டு மாமா

“கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு” என்று தலைவர் மாமா கூறுகின்ற வீறுகொண்ட தளபதி கிட்டு மாமா. இவர் போர்க்களங்களில் சிறந்த வீரன். கொரில்லாப் போர்க்கலையின் தந்திரி. போராளிகளை வழிநடத்துவதில் தலைசிறந்த தளபதி. பல்துறை சார்ந்த சிறந்த கலைஞன். மக்களிடையே விடுதலை தொடர்பான நம்பிக்கையை விதைத்த வழிகாட்டி. தமிழீழத்தின் பொருண்மிய மேம்பாட்டுச் செயற்பாடுகளில் முதன்மையானவர். தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது கட்டுப்பாட்டுப் பகுதியாகிய யாழ். குடாநாட்டை நிர்வகித்த முதற்தளபதியும் இவரே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை அனைத்துலகம் எங்கும் எடுத்துச்செல்ல, தலைவர் மாமாவின் பணிப்பில் பிரித்தானியா வந்தார். ஐரோப்பாவில் வாழ்கின்ற ஈழத்தமிழர்களை ஒன்றிணைத்து, தமிழீழ விடுதலைக்கான செயற்பாடுகளை துரிதமாகவும் நேர்த்தியாகவும் நெறிப்படுத்தினார். அதற்காகப் பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கி, தாய்மண் பற்றோடும் இலட்சிய உறுதியோடும் புலம்பெயர்ந்த தமிழ்த் தலைமுறைகள் வளர்வதற்குரிய வழிகாட்டல்களை மேற்கொண்டார்.

கிட்டு மாமாவின் நீண்ட பல பேச்சுவார்த்தைகளின் ஊடாகக் கிடைத்த சமாதானச் செய்தியோடு சர்வதேசக் கடற்பரப்பின் வழியே தமிழீழத்திற்குச் செல்லும்போது, இந்திய அரசின் கடற்படை வழிமறித்து கைதுசெய்ய முற்பட்டது. அவர்களது சதித்திட்டத்தைப் புரிந்துகொண்ட கிட்டு மாமா, சரணடைய மறுத்தார். கப்பலின் பணியாளர்களைத் தப்ப வைத்த பின்னர், தாம் பயணித்த கப்பலை வெடிக்க வைத்து தம் தோழர்களோடு கடலிலே வீரகாவியம் ஆனார்.

கேணல் கிட்டு மாமாவும் அவரோடு பயணித்த லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி, மேஜர் மலரவன், கடற்புலிகளான கப்டன் குணசீலன், கப்டன் ஜீவா, கப்டன் றொசான், கப்டன் விஜய், லெப்டினன்ட் தூயவன், லெப்டினன்ட் நல்லவன், லெப்டினன்ட் அமுதன் ஆகிய ஒன்பது வேங்கைகளும் 1993 யனவரி 16 ஆம் நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

எமது விடுதலைப் போராட்டம் வீறுகொண்டு வளர்வதை விரும்பாத இந்திய அரசு, ஈழத்தமிழர்களுக்குச் செய்த நயவஞ்சகமான செயல்களுள் வங்கக் கடலிலே காவியமான பத்து வேங்கைகளின் இழப்பும் சேர்ந்து கொண்டது. இம்மாவீரர்களின் முப்பதாம் ஆண்டு நினைவினை நெஞ்சிருத்தி உறுதி எடுக்கிறோம். உங்கள் கனவாகிய தமிழீழ தேசத்தை மீட்டாள்வோம்.

நன்றி,
வணக்கம்.